**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | STC – 137/2024 |
| Deposition of Witness | : | PW– 3 |
| Name | : | அர்ச்சுணன் |
| Father Name | : | பழனியப்பன் |
| Village | : | அருவங்காடு |
| Taluk | : | கோத்தகிரி |
| Age | : | 59 |

Accused Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 14.08.2026

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கோத்தகிரி, அருவங்காடு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. கடந்த 10.08.2023 ஆம் தேதியன்று வெள்ளகோவில் காவல் நிலையத்தில் நான் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது வெள்ளகோவில் காவல் நிலைய முதல் நிலைக் காவலர் திரு.பிரசாத் என்பவர் மாலை 15.30 மணிக்கு நிலைய அலுவலில் இருந்தபோது, கோவை கங்கா மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற இண்டிமேசன் பெயரில் அங்கு சென்று உள்நோயாளியாக இருந்த அனுசுயாதேவி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று பின்னர் நிலையம் வந்து அதன் தன்மைக்கேற்ப வெள்ளகோவில் காவல் நிலையக் குற்ற எண். 295/2023 – U/S: 279, 337 IPC ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதன் அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பியும் அதன் நகலை புலன் விசாரணைக்காக உதவி ஆய்வாளராகிய எனது பார்வைக்கு வைத்தார். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. பின்னர் இவ்வழக்கினை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 11.08.2023 ஆம் தேதியன்று மாலை 16.30 மணிக்கு சம்பவ இடம் சென்று ஆஜர் சாட்சிகள் மோகன் மற்றும் முருகேசன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். **(மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

4. சாட்சிகள் அனுசியா, கார்த்திக்கேயன், தாமரைக்கண்ணன், மோகன், முருகேஷன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

5. பின்னர் கடந்த 14.08.2023 ஆம் தேதி காலை 09.30 மணிக்கு நிலையம் ஆஜரான எதிரி ஆனந்தன் என்பவரை கைது செய்து தக்க நிலைய பிணையில் விடுவித்தேன்.

6. இவ்வழக்கில் கடந்த 14.08.2023 ஆம் தேதியன்று விபத்தை ஏற்படுத்திய TN 38 N 3656 என்ற பதிவு எண் கொண்ட Ashok Layland அரசுப்பேருந்தின் விபத்திற்கான காரணம் அறியும்பொருட்டு காங்கயம் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடம் ஆய்வுக்கு உட்படுத்தி, மோட்டார் வாகன ஆய்வறிக்கைச் சான்று வழங்கிய மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ஈஸ்வரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். கடந்த 16.08.2023 ஆம் தேதியன்று விபத்துக்குள்ளான TN 42 Y 3989 என்ற பதிவு எண் கொண்ட Hero Honda Pleasure Scooty என்ற இருசக்கர வாகனத்தின் விபத்திற்கான காரணம் அறியும்பொருட்டு காங்கயம் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடம் ஆய்வுக்கு உட்படுத்தி, மோட்டார் வாகன ஆய்வறிக்கைச் சான்று வழங்கிய மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ஈஸ்வரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **(TN 38 N 3656 என்ற பதிவு எண் கொண்ட Ashok Layland Bus ன் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும், TN 42 Y 3989 என்ற பதிவு எண் கொண்ட Hero Honda Pleasure Scooty ன் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

7. கடந்த 23.09.2023 ஆம் தேதியன்று பணி ஒதுக்கீடு சான்று வழங்கிய தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், ஒண்டிபுதூர் நிலை கிளை மேலாளர் திரு.பரத்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பணி ஒதுக்கீடு சான்று நகல் பெற்றேன். **(பணி ஒதுக்கீடு சான்று நகல் அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

8. பின்னர் கடந்த 27.09.2023 ஆம் தேதியன்று இவ்வழக்கு விபத்தில் காயம்பட்ட அனுசுயாதேவி என்பவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து விபத்து பதிவேடு நகல் மற்றும் காயச்சான்று நகல் வழங்கிய கோவை கங்கா மருத்துவமனை மருத்துவர் கோவை கங்கா மருத்துவமனை மருத்துவர் திரு.குமணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **(கோவை கங்கா மருத்துவமனை மருத்துவர் வழங்கிய அனுசுயாதேவி என்பவரின் விபத்து பதிவேடு அ.சா.ஆ.8 ஆகவும், காயச்சான்று அ.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

8. பின்னர் கடந்த 27.09.2023 ஆம் தேதி கோவை கங்கா மருத்துவமனை மருத்துவர் திரு.குமணன் என்பவர் வழங்கிய காயச்சான்றிதழில் காயம்பட்ட அனுசுயா தேவி என்பவருக்கு கணுக்காலில் ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்பதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவினை 279, 337 IPC வில் இருந்து 279, 338 IPC ஆக சட்டப்பிரிவினை மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். (**சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

9. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த முதல்நிலைக் காவலர் திரு.பிரசாத் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் புலன் விசாரணை முடித்து எதிரி மீது 27.09.2023 ஆம் தேதியன்று சட்டப்பிரிவு 279, 338 IPC ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

விபத்து நடைபெற்றது 10.08.2023 ஆம் தேதி என்றால் சரிதான். அன்றைய தேதியே கோவை கங்கா மருத்துவமனையிலிருந்து இண்டிமேசன் கிடைக்கப்பபெற்றது என்றால் சரிதான். ஒரு நாள் காலதாமதமாக தான் 13.08.2023 ஆம் தேதி மாலை 03.30 க்கு வாக்குமூலம் பெற்றேன் என்று சொன்னால் சரியல்ல. விபத்து நடந்த சாலை கோவை– திருச்சி செல்லும் பிரதான சாலை மற்றும் தேசிய நெடுஞ்சாலை மற்றும் போக்குவரத்து மிகுந்த சாலை என்று சொன்னால் சரிதான். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடம் அருகே பாலா பள்ளி உள்ளது என்றால் சற்று தூரத்தில் உள்ளது. விபத்தில் காயமடைந்த அனுசுயாதேவி தலைக்கவசம் அணிந்து சென்றதாக குறிப்பு எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் காயமடைந்த அனுசுயாதேவி அவரது இருசக்கர வாகனத்தில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி செல்லும்போது அதே திசையில் வந்த அரசுப்பேருந்து மோதியது என்று சொன்னால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் அரசு பேருந்திற்கு எந்த விதமான சேதாரமும் இல்லை என்று சொன்னால் சரிதான். இருசக்கர வாகனத்திற்கு முன்பக்கம் தான் சேதாரம் என்று சொன்னால் சரிதான். பின்பக்கம் எந்த சேதாரமும் இருப்பதாக மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். விபத்தில் காயமடைந்த அனுசுயாதேவி பாலா மெட்ரிகுலேசன் பள்ளியிலிருந்து தனது இரு குழந்தைகளையும் அழைத்து வரும்போது விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்து நடந்த சாலை கிழமேல் தார் சாலை என்றால் சரிதான். பால மெட்ரிகுலேசன் பள்ளியிலிருந்து மெயின் ரோட்டிற்கு வருவதற்கு வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வரவேண்டும் என்றால் சரிதான். விபத்தில் அடிபட்ட அனுசுயாதேவி என்பவர் தான் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்து மெயின் ரோட்டை அடைந்து மெயின் ரோட்டில் வந்த வாகனத்தை கவனிக்காமல் வலிய விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.08.14 17:15:59 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்